[1975 அக்டோபர் 24

ஆந்திர மாநிலத்திலிருந்து பெறப்பட்ட புஞ்சை தானியங்கள்

* 36 வினு—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆந்திர மாநிலத்திலுள்ள பொப்பிலியிலிருந்து தமிழ் நாடு சிவில் சப்ளே கார்ப்பரேஷன் அண்மையில் வரவழைத்திருந்த புஞ்சை தானியங்களில் மண் கலப்படம் செய்யப்பட்டிருந்தது உண்மையா ?

(இ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) ஆந்திர மாநிலத்திலுள்ள பொப்பிலியிலிருந்து அனுப்பப்பட்டிருந்த 280 மூட்டை கேழ்வரகில் 10 மூட்டைகளில் மண் கலப்படம் செய்யப்பட்டிருந்தது. இவ்வாறு பாதிக்கப்பட்ட எல்லா சரக்குகளும் திருப்பி அனுப்பப்பட்டு, அவற்றுக்குப் பதிலாக வேறு மூட்டைகள் பெறப்பட்டன. எனவே இதில் குற்றவியல் நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, இப்படி கலப்படம் செய்யப்பட்ட மூட்டைகள் திருப்பியனுப்பப்பட்டதாகவும் அதற்குப் பதிலாக பெறப்பட்டதாகவும் சொன்னார்கள். வேறு வகையில் இதற்கான நடவடிக்கைகள் எடுப்பதற்கு, மத்திய அரசாங்கத்தின் மூலமாக நடவடிக்கை எடுப்பதற்கு அரசு ஏதேனும் ஆவன செய்ய முன்வருமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, இதிலே கலப்படம் என்ற பிரச்சனை எழவில்லை. நாம் வாங்கும்போது, வாங்கி வந்த 280 மூட்டைகளில் 10 மூட்டைகளிலே அதிக மண், கல் சேர்ந்து இருந்ததாக சந்தேகப்பட்டு முழு சாக்குமே தேவையில்லை என்று சொல்லி யாரிடத்திலே வாங்கினேமோ அவர்களுக்கே திருப்பிக் கொடுத்து விட்டோம். அவர்கள் பதிலாக நல்ல சாக்கை கொடுத்ததால் வாங்கிக் கொண்டோம்.